2020 செப்டம்பர் 16]

(ஊ) தென்காசி மாவட்ட ஆட்சியர் வளாகத்தை ஆயிரப்பேரியில் அமைக்க அனுமதித்து வெளியிடப்பட்ட அரசாணையை திரும்பப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பூங்கோதை, என்ன சொல்லுங்கள்? (குறுக்கீடு) இருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லோரும் எழுந்திருந்தால் எப்படி? திருமதி பூங்கோதை, என்ன சொல்லுங்கள்?*

பிற்பகல் 2–10

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. மிக சுருக்கமாக ஒரே ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். புதியதாக உருவாக்கப்பட்ட தென்காசி மாவட்டத்திற்கான, மாவட்ட ஆட்சியர் வளாகத்தை ஆயிரப்பேரி கிராமத்தில் அமைக்க அனுமதித்து 32 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆயிரப்பேரி கிராமமானது,* Hilly Area Conservation Act, *நெல்லை வனப் பாதுகாப்புப் பகுதிக்குட்பட்ட* buffer zone, *பாதுகாக்கப்பட்ட* area *ஆகவும், சதுப்பு நிலமாகவும் உள்ளதால், இவ்விடத்தில் மாவட்ட ஆட்சியர் வளாகம் அமைத்திட அனுமதித்து வெளியிடப்பட்ட அரசாணையைத் திரும்பப் பெற வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கான கட்டடம் அமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. இடம் தேர்விலே பல்வேறு ஆட்சேபணைகள் வரப்பெற்ற காரணத்தினால், அது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டு, திரு. பனீந்தர் ரெட்டி, இ.ஆ.ப.,* Commissioner of Revenue Administration *அவர்கள் இன்று நேரிலே சென்று மாவட்ட ஆட்சியருடன் மறுஆய்வு மேற்கொள்வார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க,*

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2020 செப்டம்பர் 16

நான் கடந்த வாரம் நேரிலே சென்றேன். அங்கிருக்கக்கூடிய மக்களுடைய கருத்துகள், மக்கள் பிரதிநிதிகளுடைய பல்வேறு கருத்துகளெல்லாம் உள்வாங்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தகுந்த ஆய்வுகள் மேற்கொண்டு, அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் இடத்திலே அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2020 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் மற்றும் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(அள) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*